# அலகு 5

# பனிக்கட்டி யுகம்

அ. சரியான விடைக்கு வட்டமிடுக.

1. பனிக்கட்டி யுகம் என்றால் என்ன?

   A பனிக்கட்டி கரையத் தொடங்கிய காலம்.
   B பூமி பனிக்கட்டியால் மூடியிருந்த காலம்.
   C பூமி நீரால் சூழப்பட்ட காலம்.
   D பூமி நெருப்பால் சூழப்பட்ட காலம்.

2. கிளேசியர் என்றால் என்ன?

   A பெரிய பனிக்கட்டிகள் மெல்ல மெல்ல சரிவுகளில் நகர்ந்து கடலில் படர்வதாகும்.
   B எரிமலைகள் வெடிப்பது.
   C சூரிய ஒளி பூமியைத் தாக்குவது.
   D கடல் நீர் பனிக்கட்டிகளாய் மாறுவது.


3. கீழ்க்காண்பனவற்றுள், எவை கண்டங்கள் ஆகும்?

   i தென் அமெரிக்கா
   ii பசிபிக் பெருங்கடல்
   iii ஆசியா
   iv இந்திய பெருங்கடல்

   A ii, iv
   B i, ii
   C iii, iv
   D i, iii

4. கீழ்க்காண்பனவற்றுள் எது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான சரியான வழியாகும்.

   A மரங்களை வெட்டுதல்.
   B குப்பைகளை ஆற்றில் வீசுதல்.
   C பொருள்களை மறுசுழற்சி செய்தல்.
   D குப்பைகளை கண்ட இடங்களில் எரிப்பது.



5. மேற்கண்ட படம் எதனைக் குறிக்கின்றது?

   A மறுசுழற்சி
   B மரங்களை நடுதல்
   C நீரைச் சுத்திகரிக்கும் முறை
   D சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் முறை

6. கண்டங்கள் எவ்வாறு உருவாகின?

   A பூமி சுற்றுவதால்
   B கிளேசியர் நகர்ச்சியினால்
   C சுனாமி ஏற்பட்டதால்
   D எரிமலை வெடித்ததால்

7. ஏன் பூமியின் பனிப்பாறைகள் கரையத் தொடங்கின?

   A புகை மூட்டத்தால்
   B தட்பவெப்ப நிலை மாற்றத்தால்
   C மழையின் காரணமாக
   D எரிமலை தாக்கத்தால்

LIVEWORKSHEETS